[2002 மே 7

உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் சொன்ன கருத்துகளை ஏற்று, அரசு இதுபற்றிச் சிந்திக்கும் என்ற முடிவைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம்.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கோயம்பேட்டிலே கட்டப்பட்டிருக்கிற 295 கடைகள் பல ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கின்றன. இதை குத்தகை அடிப்படையிலே கொடுக்க வாய்ப்பில்லை என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தனியார்களுக்குக் குத்தகை அடிப்படையிலே கொடுப்பதற்கு சிரமம் இருந்தாலும், இப்பொழுது காய்கறி மற்றும் பூ கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கத்திற்காவது அதை உடனடியாகக் கொடுப்பதற்கு ஆவன செய்தால், அரசாங்கம் கட்டுகிற re-finance செய்திருக்கிற அந்த வட்டிக்காவது பணம் கிடைக்கும். தனியார்களுக்கு குத்தகைக்குக் கொடுத்தால் கூட, பல சட்டச் சிக்கல்கள் இருக்கும். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதுபோன்று கொடுத்தால், அவர்கள் அந்த விற்பனையிலே ஒரு குறிப்பிட்ட காலத் தொகையினை உபயோகிப்பதற்கு வாய்ப்பிருக்கும். அதனால் வட்டியாவது கிடைக்க வாய்ப்பிருக்கும் என்பதைச் சொல்லி, தங்கள் மூலம் அமைச்சர் அவர்கள் விடையளிப்பாரா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருக்கும் மற்றும் கூட்டுறவுச் சங்கத்திற்கும் குத்தகை அடிப்படையில் கொடுப்பதற்கு அரசு எந்தவித முடிவும் ஏற்படுத்தவில்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி, இந்தக் கருத்துகளை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 303, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

303—

கால்நடை மருத்துவனை

***6759—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2002 மே 7]

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, காரியாபட்டி வட்டத்திலுள்ள மாந்தோப்பு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, காரியாபட்டி வட்டத்திலுள்ள மாந்தோப்பு கிராமத்தைச் சுற்றிலும் 30-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. 5,000 விவசாயக் குடும்பங்கள் உள்ளன. அங்கே கால்நடைகள் அதிகமாக உள்ளன. மாந்தோப்பு கிராமத்தில் கால்நடை பார்வை மையம் செயல்பட்டு வருகிறது. மேற்படி கிராம மக்கள் கால்நடை மருத்துவமனைக்குச் செல்வதாக இருந்தால், 12 கிலோமீட்டர் தூரத்திலுள்ள காரியாபட்டிக்குச் செல்ல வேண்டும். அல்லது 18 கிலோமீட்டர் தூரமுள்ள விருதுநகருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே மாந்தோப்பு கிராமத்திலுள்ள கால்நடை பார்வை மையத்தை கால்நடை மருந்தகமாக மாற்றித் தருவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வரும் நிதியாண்டிலேயாவது ஆவன செய்யுமா எனப் பேரவைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் மாந்தோப்பு கிராமமும் வருகிறது. மேற்படி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் அமைந்துள்ள மாந்தோப்பு கிராமத்தில் 5 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அழகியநல்லூர் என்னும் கிராமத்தில் ஒரு கிளை நிலையமும், 8 கிலோமீட்டர் தூரத்திலுள்ள கல்குறிச்சி கிராமத்தில் மற்றொரு கிளை நிலையமும் அமைந்துள்ளன. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கும் மாந்தோப்பு கிராமத்தில் ஏற்கெனவே நடமாடும் கால்நடை மருந்தகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மேலும், இக்கிராமத்தைச் சுற்றி காரியாபட்டி,

முடுக்கன்குளம் மற்றும் மல்லாங்கிணறு ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் அமைந்துள்ளன. எனவே, மேற்கூறிய மாந்தோப்பு கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 304, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.*

304—

படகுத் துறை

***2313—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் சுற்றுலாத் துறை அலுவலகம் வைத்து படகுத் துறையைத் தொடர்ந்து நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏலகிரி மலையில் சுற்றுலாத் துறை அலுவலகம் வைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலகிரி மலையிலே நீங்கள் சுற்றுலா அலுவலகத்தை வைக்காவிட்டாலும் பரவாயில்லை. மாவட்டத் தலைநகராம் வேலூரிலே சுற்றுலா அலுவலகத்தை வைத்துவிட்டு--என்னுடைய கேள்வியின் முக்கியப் பகுதியே,—படகுத் துறையை நீங்கள் தொடர்ந்து சுற்றுலாத் துறை மூலம் நடத்தவேண்டும் என்பதுதான். ஏனென்றால், ஏலகிரி மலையிலே இருக்கக்கூடிய படகுத்துறை தற்போது தனியார் மூலமாக நடத்தப்படுகிறது. சென்ற கோடை விழா நடந்தபோது, மாண்புமிகு அப்போதைய சுற்றுலாத் துறை அமைச்சர் சகோதரி சரோஜா அவர்களும், அப்போதைய அமைச்சர் திரு. பாண்டுரங்கன் அவர்களும் ஏலகிரி மலைக்கு விழாவிற்கு வந்திருந்தார்கள். அப்போது படகு விடக்கூடிய இடத்திலே, ரௌடிகள் எல்லாம், சில பேர், படகுகளை